| | | |
|---|---|---|
| Publication : **Dinakaran** | | Language : **Tamil** |
| Date : **21-10-09** | Page No : **11** | Edition : **Chennai** |
| Headline : **Clenergen set to launch Tuticorin – 16 MW Power Plants** | | |

### தூத்துக்குடியில் அமைகிறது

# ரூ.250 கோடி முதலீட்டில் 16 மெ.வா. மின் நிலையம்

## கிளீனர்ஜன் அமைக்கிறது

**சென்னை, அக். 21:** தூத்துக்குடியில் 16 மெகா வாட் பயோமாஸ் மின் உற்பத்தி நிலையத்தை அமெரிக்காவைச் சேர்ந்த கிளீனர்ஜன் கார்ப்பரேஷன் அமைக்கிறது.

அமெரிக்காவைச் சேர்ந்த முன்னணி மின் உற்பத்தி நிறுவனம், கிளீனர்ஜன் கார்ப்பரேஷன். சென்னையில் அதன் இந்தியப் பிரிவான கிளீனர்ஜன் இந்தியா நிறுவனம் செயல்படுகிறது. கிளீன் எனர்ஜி எனப்படும் சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு இல்லாத மின் ஆற்றல் தயாரிப்பில் முதல் கட்டமாக தமிழகத்தின் தூத்துக்குடியில் 16 மெகாவாட் மின் உற்பத்தி நிலையத்தை அது அமைக்கிறது. கர்நாடகாவில் 64 மெகாவாட் மின் உற்பத்தி நிலையத்தையும் அது அமைக்க உள்ளது.

இவற்றின் மொத்த மதிப்பு ரூ.1,135 கோடி. தமிழக மின் திட்ட மதிப்பு சுமார் 250 கோடியாக இருக்கும். இந்த இரண்டு நிலையங்களும் வாயு மயப்படுத்துதல் (கேசிபிகேஷன் டெக்னாலஜி) என்ற தொழில்நுட்ப அடிப்படையில் சுற்றுச்சூழல் பாதுகாப்பாக அமையும்.

தூத்துக்குடியில் அமையும் மின் நிலையத்தில் அடுத்த ஆண்டு உற்பத்தி தொடங்கும். இதற்காக பீமா பாம்பூ என்ற மூங்கில், பவுலோனியா ஆகிய மரங்கள் 2,000 ஏக்கரில் பயிரிடப்பட்டு, மின் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும். இதற்காக விவசாயத்துக்கு பயன்படாத நிலங்கள் 49 ஆண்டு குத்தகைக்கு எடுக்கப்படும் என நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி மார்க் க்யின் தெரிவித்தார்.